புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜுன் 20, 2024 • புரட்சி 24 • முழக்கம் 23 • விலை ரூ.3.00

# ஜாதிச் சங்க ரவுடிகள் மீது கடும் நடவடிக்கை தேவை!

## கழகத் தலைவர் அறிக்கை

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தை ஜாதிவெறி கும்பல் தாக்கிய சம்பவத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்!**


**தாக்குதல் நடத்திய அனைவரையும் உடனடியாக கைது செய்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க தமிழ்நாட்டு அரசிற்கு கோரிக்கை!**

**இது குறித்து கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை :**

திருநெல்வேலி மாவட்டம் பாளையங் கோட்டையில் ஜாதி மறுப்பு காதல் இணைய ர்களுக்கு பாதுகாப்பு அளித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஜாதி அமைப்பு நடத்திவரும் பந்தல் ராஜா என்பவரின் தலைமையில் வந்த ஜாதி வெறி பிடித்த 25 பேர் கொண்ட கும்பல் காவல்துறை முன்பே அலுவலக கண்ணாடிகள் கதவுகள் பிரிட்ஜ் உள்ளிட்ட உள்ளே உள்ள பொருட்களை எல்லாம் அடித்து உடைத்து நொறுக்கி உள்ளார்கள்.

திருநெல்வெலி மாநகரம் பாளையங்கோட்டை நம்பிக்கை நகரில் வசிக்கும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மதன் குமார் (28) என்பவரும்,பெருமாள் புரத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த முருகவேல் என்பவரின் மகள் உதய தாட்சாயினி (23) என்பவரும் பல ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளனர்.

ஜாதியை காரணம் காட்டி இவர்களின் காதலுக்கு பெண்ணின் பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர். பெற்றோரின் கடும் எதிர்ப்பை மீறி 13.06.24 அன்று திருமணம் செய்வதற்காக திருநெல்வேலி மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் முன்பதிவு செய்திருந்தனர்.



பெண்ணின் பெற்றோர் தங்களை தாக்க கூடும் என்று அஞ்சிய காதல் இணையர்கள் வினோபா நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகதில் தங்களுக்கு ஜாதி வெறியர்களால் உயிர் அச்சம் இருப்பதாக கூறி பாதுகாப்பு கோரி தஞ்சமடைந்துள்ளனர்.

இதனை கேள்விப்பட்ட ஜாதி வெறியர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு கும்பலாக வந்து காதல் இணையர்களை கடத்தி பிரிக்கும் நோக்கில் வந்துள்ளனர். ஆனால் அதற்கு முன்பே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் அவ்விணையர்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றிவிட்ட காரணத்தினால் கோபமடைந்த அக்கூட்டம் அலுவலகத்திற்குள் நுழைந்து பொருட்களை அடித்து நொறுக்கி உள்ளது.

அங்கு இருந்த காவல்துறை தாக்குதலில் ஈடுபட்ட சிலரை அப்பொழுதே கைது செய்து உள்ளார்கள்.

தங்களின் சுய நலத்திற்காகவும், சொகுசு ஆடம்பர வாழ்க்கை வாழவும் ஜாதி வெறியை தூண்டிவிட்டு அப்பாவி இளைஞர்களை தவறாக வழிநடத்தியும் இது போன்ற வன்முறை தாக்குதல்களையும் நடத்தி விளம்பரம் தேடிக் கொள்ளும் சிறு சிறு ஜாதி அமைப்புகளை நடத்தும் ரவுடிகள் மீது தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூக நீதி கொள்கையை நடைமுறைப்படுத்த திட்டங்கள் வகுத்து சீரிய வகையில் ஆட்சி நடத்தி வரும் திமுக அரசை இது போன்ற சம்பவங்களை பயன்படுத்தி அவப்பெயரை உண்டாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபடுகின்றனர்.

அவற்றிற்கு இடம் கொடாத வகையில் இது போன்ற ஜாதி வெறிபிடித்த ரவுடிகளை அவர்கள் நடத்தும் அமைப்புகளை இரும்புக் கரம் கொண்டு இந்த அரசு ஒடுக்க வேண்டும் என்று கோருகிறோம்.

தங்கள் அரசியல் பணியுடன் ஜாதி ஒழிப்பு பணியையும் மேற்கொண்டு வரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தீண்டாமை ஒழிப்பு முன்னணி தோழர்கள் அலுவலகம் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலுக்கு முற்போக்கு சக்திகள் ஒருங்கிணைந்து தங்களது எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும். மேலும் இது போன்ற தாக்குதலை ஒரு எச்சரிக்கையாகவும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனிவரும் காலங்களில் இது போன்ற ஜாதி வெறியர்களின் தாக்குதலை நேர் நின்று எதிர்கொள்ள நம்மை நாம் தயார்படுத்திக் கொள்வதும் அவசியம் என்றும் கருதுகிறோம்.

தற்போது ஜாதி வெறியர்களின் தாக்குதலுக்கு எந்நேரமும் ஆளாக்கப்படும் அபாயத்தில் இருக்கக்கூடிய உதய தாட்சாயினி - மதன்குமார் இணையர்களுக்கு தமிழ்நாடு அரசு தக்க பாதுகாப்பு வழங்கி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

**கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
**15.06.24**

# ஒரு நீதிபதியின் லவ் ஜிகாத் தீர்ப்பு

சங்கிகள் நீதிபதிகளாக அமர்ந்து கொண்டு சட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து வருகிறார்கள். ம.பி மாநிலத்தில் ஒரு கூத்து நடந்திருக்கிறது.

1954ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டத்தின் நோக்கமே ”வெவ்வேறு மதத்தினருக்கு இடையில் நிகழும் திருமணங்களை சட்டப்படி பாதுகாப்பது தான். ஆனால் இப்படி நடக்கும் திருமணங்கள் செல்லாது என்று தீர்ப்பளித்திருக்கிறார் ஒரு சங்கி நீதிபதி.

இந்துப் பெண்ணும், முஸ்லிம் ஆணும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து சிறப்புத் திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடிவு செய்கிறார்கள். பெண் வீட்டாரின் கொலை மிரட்டலால் தங்களுக்கு பாதுகாப்பு கேட்டு நீதிமன்றத்தை அணுகினார்கள் அந்த தம்பதியினர். ஆனால் வழக்கை விசாரித்த நீதிபதி, பாதுகாப்பு வழங்க முடியாது என்று கூறியதோடு, முஸ்லீம் மத சட்டத்தின் படி உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாத இந்த திருமணம் செல்லாது என்று வழக்கின் நோக்கத்திற்கு அப்பால் சென்று தீர்ப்பு வழங்குகிறார்.

திருமணம் என்பது கூட ஒரு பக்கம் இருக்கட்டும், தனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று கூறி பாதுகாப்பு கேட்டாலே அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் சட்டம் 21 கீழ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பது தான் சட்டம். அதைக்கூட பரிசீலிக்க இந்த நீதிபதி தயாராக இல்லை.

சங்கிகள் முழங்கும் ‘லவ் ஜிகாத்’ என்ற முழக்கத்திற்கு சட்ட வடிவம் அளிக்க முயல்கிறார் இந்த சங்கி நீதிபதி. சிறப்புத் திருமணத்தை மேலும் எளிமையாக்க வேண்டும் என்பதற்காக தொடுக்கப்பட்ட வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மற்றொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும். இப்போது தலைமை நீதிபதியாக உள்ள டி.ஒய். சந்திரசூட், மத மறுப்பு திருமண வழக்கு ஒன்றில் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறார் ( *Shafin jahan VS Asokan KM 2018* ). சந்திரசூட் நீதிபதியாக இருந்த போது வழங்கிய தீர்ப்பில், திருமணத்துக்கான அடிப்படை இணையர்களுக்கு உள்ளேயான நெருக்கம், அது முற்றிலும் அவர்களுக்கான தனித்துவமான உரிமை, அதை சமூகம் ஏற்கிறதா? இல்லையா? என்ற கேள்விக்கு இடமில்லை ( *Social approval for intimate personal decisions is not the basis for recognising them* ) என்று தெளிவாக தீர்ப்பளித்திருக்கிறார்.

சட்டம் இப்படி தெளிவாக இருந்தாலும் சங்கி நீதிபதிகள் ஆங்காங்கே உட்கார்ந்து கொண்டு சட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து வருகிறார்கள். இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் பல மாநிலங்களிலும் தான்.

தலையங்கம்

## ஜாதி ஒழிப்புப் பரப்புரையை கூர்மைப்படுத்துவோம்!

நெல்லை மாவட்டத்தில் ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்த காதல் தம்பதிக்கு பாதுகாப்பு அளித்ததற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தை ‘வெள்ளாளர் முன்னேற்றக் கழகம்’ என்ற ஜாதி வெறி அமைப்பு அடித்து நொறுக்கியுள்ளது. அந்த அமைப்பைச் சேர்ந்த பந்தல் சிவா என்பவரின் தலைமையில் இச்சம்பவம் நடந்திருக்கிறது. இதனை பெண் வீட்டாரின் வழக்கமான எதிர்ப்பு மனநிலை என்று கருதிவிட முடியாது. பந்தல் சிவா என்பவர் ஜாதியின் பெயரால் ரவுடித்தனமும், கட்டப் பஞ்சாயத்தும் செய்துகொண்டிருக்கும் நபர். “தனது சொந்த செல்வாக்கை உயர்த்திக்கொள்ள வேண்டும், ஜாதித் திமிரை வெளிக்காட்ட வேண்டும்” என்ற உள்நோக்கத்தோடு திட்டமிட்டே இத்தாக்குதலை நடத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஆளும் கூட்டணியிலும், அகில இந்திய அளவில் பிரதான எதிர்க்கட்சியான இந்தியா கூட்டணியிலும் முக்கிய அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் இத்தகைய தாக்குதலை துணிச்சலாக நடத்தியிருப்பது பெரும் கண்டனத்திற்குரியது. ஜாதிவெறி அமைப்புகளின் சட்டவிரோத துணிச்சல் போக்கை தொடக்க நிலையிலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. தாக்குதலில் ஈடுபட்ட 25 பேரில் 10 பேரை காவல்துறை உடனடியாக கைது செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் தொடர்கதை ஆகிவிடாமல் இருக்க தொலைநோக்கு சிந்தனையோடு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஏற்கெனவே 2020ஆம் ஆண்டில் ஈரோட்டைச் சேர்ந்த இளமதி- செல்வன் காதல் இணையர்களுக்கு, சேலம் மாவட்டம் காவலாண்டியூரில் திராவிடர் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ஈசுவரன், ஜாதி மறுப்புத் திருமணம் செய்துவைத்து பாதுகாப்பு அளித்தார். இதை பொறுத்துக்கொள்ள முடியாத ஜாதிவெறிக் கும்பல் மூவரையும் கடத்திச் சென்று, காதல் தம்பதியை பிரித்து வைத்தது. கழகத் தலைவர் நீண்ட சட்டப்போராட்டம் நடத்தி தம்பதியை மீண்டும் இணைத்துவைத்தார். திராவிடர் விடுதலைக் கழகமோ, திராவிட இயக்கங்களோ அல்லது மற்ற முற்போக்கு சக்திகளோ ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைக்கின்றன. அவர்களை பாதுகாத்து வைப்பவர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்ற சூழல் ஏற்படுவது என்பது ஜாதி வெறி சக்திகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தையே உணர்த்துகிறது.

கடந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் நாடு முழுவதும் வளர்ந்திருக்கிற மதவாத, ஜாதியவாதம் கொடுக்கிற துணிச்சலே இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் நடைபெறக் காரணமாக இருக்கிறது. ஆனால் சுயமரியாதைத் திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை அரை நூற்றாண்டுக்கு முன்பே கொடுத்து, ஜாதி மறுப்புத் திருமணங்கள் பெருகிட வழிவகை செய்த தமிழ்நாட்டில், இத்தகைய போக்கு தொடர்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான கடுமையான சட்டம் இயற்றுவதும், ஜாதி மறுப்புத் திருமணம் புரியும் தம்பதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும். ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக சட்டமியற்றக்கோரி பல ஆண்டுகளாக எழுந்து வரும் கோரிக்கையை அரசு இனியும் அலட்சியப்படுத்தக்கூடாது.

எனினும் அரசுத் தரப்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மட்டுமே இத்தகைய தாக்குதல் சம்பவங்களை தடுத்துவிடும் என்பதோ, ஜாதி மறுப்பு இணையர்களின் பாதுகாப்பை முற்றுமுழுதாக உறுதி செய்திவிடும் என்றோ கருதிவிட முடியாது. ஜாதி ஒழிப்புப் பரப்புரைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். ஜாதிய வாழ்வியல் முறையில் இருந்து மக்களை விடுவிக்கும் முயற்சிகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இப்பணியில் தன்னை நேரடியாக ஈடுபடுத்திக்கொள்வதே ஜாதி வெறி சக்திகளுக்கு திருப்பிக் கொடுக்கும் சரியான பதிலடியாக இருக்கும். வர்க்கம் பெரிதா, வர்ணம் பெரிதா என்ற நட்புமுரண் விவாதங்களை ஒதுக்கிவிட்டு, வருணமும் வர்க்கமும் வேறு வேறல்ல என்பதை உணர்ந்து ஜாதி ஒழிப்புப் பரப்புரையை முற்போக்கு சக்திகள் முதன்மைப்படுத்த வேண்டும். அதன்மூலமே ஜாதிய சங்கங்கள், அமைப்புகளை மக்களிடம் இருந்து விலக்கிவைக்க முடியும்.

10 ஆண்டுகளுக்கு முன்பு, 2014ஆம் ஆண்டில் ஈரோட்டில் ‘ஜாதி மத மறுப்பு இணையர் பாதுகாப்பு’ இயக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கியது. “ஜாதி, மத மறுப்பு இணையருக்கு சட்ட ரீதியானப் பாதுகாப்பு வழங்குவது, ஜாதி, மத மறுப்புத் திருமண இணையரின் திருமணத்தைப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும்போது, ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய உதவுவது, ஜாதி, மத மறுப்புத் திருமண இணையருக்கு வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வழிகாட்டுவது, ஜாதி, மத மறுப்பு இணையரின் வாரிசுகளுக்கு ஜாதியற்றோர் என்ற பிரிவில் தனி இடஒதுக்கீடு வழங்கக் கேட்டு அரசை வலியுறுத்துவது, மத மறுப்புத் திருமணங்களைப் பதிவு செய்யும்போது சட்டத்தில் இருக்கும் இடர்பாடுகளை களைய அரசை வலியுறுத்துவது” உள்ளிட்ட நோக்கங்களோடு இந்த இயக்கம் தொடங்கப்பட்டது. அதுபோன்ற இயக்கங்கள் மாவட்டம்தோறும் மீண்டும் தொடங்க வேண்டியதன் அவசியத்தையே நெல்லை தாக்குதல் சம்பவம் உணர்த்துகிறது. முற்போக்கு சக்திகள் இத்தகைய முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன்வர வேண்டும். அதுவே சரியான தீர்வாக அமையும்!

## வினா விடை

• *அயோத்தி ராமன் கோயிலுக்கு விடப்பட்ட அனைத்து விமான சேவைகளும் ரத்து* **- செய்தி**

**ஆமாம், பூரி ஜெகநாதன் கோயிலுக்கு திருப்பி விடப் போகிறோம். இராமன் இனி சுத்த வேஸ்ட்.**

• *விருதுநகர் மறையூரில் உள்ள கிராமக் கோயிலில் கறி விருந்தில் ஆண்கள் மட்டுமே சாப்பிட்டார்கள். பெண்கள் பங்கேற்க கூடாது* **- செய்தி**

**ஆமாம் நாங்கள் மாமிசம் சாப்பிடுவோம், ஆனால் பெண்களை மதிக்க மாட்டோம். இதுதான் எங்கள் நாட்டார் தெய்வப் பெருமை.**

• *பதவியேற்பு விழாவில் அரசியலமைப்பு புத்தகத்தை கையில் எடுத்து வணங்கினார் மோடி* **- செய்தி**

**என்ன இருந்தாலும் முதல்முறையாக ஒன்றை பார்க்கும் போது உணர்ச்சிப் பொங்கத்தானே செய்யும்.**

• *நீட் தேர்வு தேவையில்லாதது* **- அன்புமணி**

**ஆனால் நீட் தேர்வை திணிக்கும் மோடி ஆட்சி தேசத்திற்கு தேவையானது**

• *சித்திரையில் குழந்தை பிறந்ததால் குடும்பத்திற்கு ஆபத்து என்பதால் பேரக் குழந்தையை கொன்ற தாத்தா கைது* **- செய்தி**

**ஜாதி வெறிக்காக ஆணவக் கொலை; மூட நம்பிக்கைகளுக்காக சிசுக் கொலை. இவையனைத்தும் சனாதன தர்மம் இந்த சமூகத்திற்கு தந்த கொடை.**

• *நாட்டை பிளவுபடுத்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உருவாக்கியதே திராவிட கோட்பாடு* **- ஆளுநர் ரவி**

**பொய்.. பொய்.. பாஜகவை விரட்டியடிக்க தமிழர்கள் உருவாக்கியதே திராவிட கோட்பாடு**

## தோழர் விஜயன் தந்தை முடிவெய்தினார்!



*வட சென்னை மாவட்டத் தோழர் விஜயன் அவர்களின் தந்தை கோ. ஏகாம்பரம் அவர்கள் 11.06.2024 அன்று முடிவெய்தினார்.*

*அவரது இறுதி நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வட சென்னை மாவட்டக் கழக அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், தட்சிணாமூர்த்தி, அருள்தாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மறைந்த ஏகாம்பரம் அவர்களின் உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள்.*

*பின்னர் அவரது உடல் கொள்கை முழக்கங்களுடன் எடுத்துச் செல்லப்பட்டு, எந்தவித இந்து மதச் சடங்கு சம்பிரதாயங்களின்றி நல்லடக்கம் செய்யப்பட்டது. இதுபோன்ற நிகழ்வு கே.பி.பார்க் பகுதியில் நடந்தது இதுவே முதல்முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

## தோழர் திலீபன் பெற்றோர் படத்திறப்பு





*ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபனின் பெற்றோர் பச்சையப்பன் - தாயாரம்மாள் ஆகியோரது படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் கூட்டம் 15.06.2024 அன்று நெமிலி பெரப்பேரி கிராமத்தில் நடைபெற்றது..*

*இந்நிகழ்விற்கு வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் இரா. சிவா தலைமை தாங்கினார். நிகழ்வில் பச்சையப்பன் - தாயாரம்மாள் ஆகியோரது படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.*

*மேலும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் இரவிபாரதி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினார்கள். நரேன் நன்றி கூறினார்.*

*இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன், அன்பு, மற்றும் தோழர்கள், தோழமை இயக்கத்தினர், குடும்பத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.*

## பெரியார் முழக்க வளர்ச்சி நிதி

**அயனாவரம் மதிவாணன் - ரூ.1000/-**

**திருச்சி சௌந்திரராசன் - ரூ.1000/-**

**நன்கொடை அளிக்க விருப்பமுள்ளோர் கீழ்க்கண்ட ஜி-பே எண் மூலமாக செலுத்தலாம்.**


**எண் : +91 63697 76351**

# வர்ணமும் வர்க்கமும் பின்னிப்பிணைந்தது!

ர.பிரகாசு

டிசம்பர் 16-ஆம் தேதி கோவை அண்ணாமலை அரங்கத்தில் நடந்த அனைத்திந்திய சாதி ஒழிப்பு இயக்கத்தின் 5-வது அகில இந்திய மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “வர்க்கமும் ஜாதியும் ஒருங்கிணைந்தது, இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஜாதியால் அடக்கப்பட்டவர்கள்தான் வர்க்க சுரண்டலுக்கும் ஆளானவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் பெரு முதலாளிகளில் உயர் ஜாதிக்காரர்களே இருக்கிறார்கள். பாம்பே டையிங் நுஸ்லி வாடியா, அசிம் பிரேம்ஜி என 2 இசுலாமியர்கள் மட்டும் தவறிப்போய் வந்துவிட்டார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் கூட சொல்லிக்கொள்ள ஆள் இல்லை. வர்க்கத்துக்கும் வர்ணத்துக்கும்

ஃபோர்ப்ஸ் வெளியிட்ட பில்லியனர்கள் பட்டியல்



ஆதாரம்: world inequality lab

இடையிலான உறவு என்னவென்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.” என்று வர்க்கத்துக்கும் வருணத்துக்கும் இடையிலான தொடர்பு குறித்து நீண்ட உரையாற்றினார்.

அந்த உரையின் கருத்துக்களுக்கு வலுசேர்க்கும் விதமான ஆய்வறிக்கை ஒன்று சமீபத்தில் வெளியாகியுள்ளது. “இந்தியாவில் வரி நீதி மற்றும் செல்வ மறுபகிர்வு: சமீபத்திய சமத்துவமின்மை மதிப்பீடுகளின் அடிப்படையில் முன்மொழிவுகள்” என்ற தலைப்பில் World Inequality Lab மே மாதத்தில் இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. நியூயார்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிதின் குமார் பாரதி, ஹார்வர்டு கென்னடி பள்ளியைச் சேர்ந்த லூகாஸ் சான்செல், பாரிஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸை சேர்ந்த தாமஸ் பிக்கெட்டி மற்றும் அன்மோல் சோமஞ்சி ஆகியோர் இணைந்து இதனை வெளியிட்டுள்ளனர். அதனைக் கருப்பொருளாகக் கொண்டு, ‘பிசினஸ் ஸ்டேண்டார்டு’ இதழில் அனொஷ்கா சாவ்னி ஜூன் 14ஆம் தேதி கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.


இந்தியாவில் ஜாதியும் வர்க்கமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தே இருக்கிறது. பில்லியனர்களில் (100 கோடி டாலருக்கு மேல் சொத்து மதிப்பு கொண்டவர்கள்) 85 விழுக்காட்டினர் உயர்ஜாதி இந்துக்களாக உள்ளனர். இதர பிற்படுத்தப்பட்டவர்களில் 9 விழுக்காட்டினர் மட்டுமே பில்லியனர்களாக உள்ளனர். பட்டியல் சமூகத்தினரில் 2.6 விழுக்காட்டினர் மட்டுமே பில்லியனர்களாக உள்ளனர். பழங்குடி சமூகத்தில் ஒருவர் கூட பில்லியனர் இல்லை. கடந்த சில ஆண்டுகளாக இந்த இடைவெளி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பில்லியனர்களின் எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளில் கடுமையாகச் சரிந்திருக்கிறது. 2008ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது கண்ட சரிவை, இப்போதும் இந்திய பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பில்லியனர்கள் கண்டிருக்கிறார்கள்.

### உயர் ஜாதி இந்துக்களே பில்லியனர்கள்!

அதேவேளையில் பார்ப்பன, பனியாக்கள் போன்ற உயர் ஜாதி இந்துக்கள் பில்லியனர்கள் கிளப்பில் இணைவது அதிகரித்துக்கொண்டே வருகிறது. “கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் பில்லியனர்கள் கிளப்பில் இணைந்தவர்கள் உயர்ஜாதியினர் மட்டுமே. கல்வி, சுகாதாரம், சமூகத் தொடர்புகள் என அனைத்தையும் ஜாதிதான் வடிவமைக்கிறது. ஜாதியின் அடிப்படையில்தான் இவற்றுக்கான அணுகலும் அமைந்திருக்கிறது. தொழில் வாய்ப்புகளுக்கும், வளங்களைப் பெருக்குவதற்கும் இதேதான் காரணமாக இருக்கிறது. நாட்டின் பல இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் வாங்கவே உரிமை இல்லை. நிலச் சந்தையில் இருந்தே தாழ்த்தப்பட்டவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். இது அவர்களின் பொருளாதாரப் பாதையை நசுக்குகிறது” என்று அன்மோல் சோமஞ்சி தனது ஆய்வில் மிக நுணுக்கமாகக் குறிப்பிடுகிறார்.

வேறு சில ஆய்வுகளுடன் இதனைப் பொருத்திப் பார்க்கும்போது கள எதார்த்தம் மேலும் துல்லியமாக வெளிப்படுகிறது. அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் 2023ஆம் ஆண்டில் ‘உழைக்கும் இந்தியாவின் நிலை’ என்ற தலைப்பில் ஒரு ஆய்வறிக்கையை


எஸ்.சி/எஸ்.டி. தொழில் முனைவோர்கள் & தொழிலாளர்கள் பங்கேற்பு (2013)



ஆதாரம்: அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழக ஆய்வறிக்கை- 2023

வெளியிட்டது. தொழிலாளர் தொகுப்பில் பெரும் எண்ணிக்கையில் இருக்கிற பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்கள், சொந்தமாக தொழில் நடத்துவது மிக மிக குறைவாகவே இருக்கிறது என்பதே அந்த ஆய்வின் முடிவு. வேலைவாய்ப்பில் 10.1 விழுக்காடு பங்களிக்கும் பழங்குடி மக்கள் 5.4 விழுக்காடு மட்டுமே தொழில் நிறுவனங்களை சொந்தமாக வைத்திருக்கின்றனர். வேலைவாய்ப்பில் 19.3 விழுக்காடு பங்களிப்பு செய்யும் பட்டியல் சமூகத்தினர் 11.4 விழுக்காடு மட்டுமே தொழில் நிறுவனங்களைக் கொண்டிருக்கின்றனர். வேலைவாய்ப்பில் 43.4 விழுக்காடு பங்களிப்பு செய்யும் இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர், 41 விழுக்காடு தொழில் நிறுவனங்களைக் கொண்டுள்ளனர். ஆனால் உயர்ஜாதியினர் வேலைவாய்ப்பில் 27.1 மட்டுமே பங்களிப்பு செய்யும் அதேவேளையில், 42.1 விழுக்காடு தொழில் நிறுவனங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பது கவனிக்க வேண்டியது.

செல்வப் பகிர்வில் ஜாதிய ஏற்றத்தாழ்வுகள்



ஆதாரம்: தேசிய குடும்பநல சுகாதார ஆய்வு

### செல்வப் பகிர்வில் ஜாதி ஆதிக்கம்!

பில்லியனர்கள் பட்டியலை மட்டும் ஜாதி வடிவமைக்கவில்லை. அதற்கு வெளியேயும் செல்வப் பகிர்வு என்பது முழுக்க முழுக்க ஜாதியின் அடிப்படையில் மட்டுமே இருக்கிறது. பட்டியல் சமூகத்தினரில் 12.3 விழுக்காடு மட்டுமே இருக்கிறார்கள் என்கிறது தேசிய குடும்பநல சுகாதார ஆய்வு. அதுவே பழங்குடியினர் 5.4 விழுக்காடு மட்டுமே செல்வந்தர்களாக உள்ளனர். பட்டியல் சமூகத்தினரில் 25 விழுக்காட்டினர் செல்வமற்ற நிலையிலேயே உள்ளனர். பழங்குடியினரில் 46.3 விழுக்காட்டினர் செல்வமற்ற நிலையில் உள்ளனர். இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் 16.3 விழுக்காட்டினர் செல்வமற்றவர்களாக உள்ளனர். 19.2 விழுக்காட்டினர் மட்டுமே அதிக செல்வம் உடையவர்களாக உள்ளனர். ஆக, ஜாதியும் வர்க்கமும் வேறு வேறு அல்ல என்பதை செல்வப் பகிர்வின் மூலம் உறுதி செய்கிறது இந்த ஆய்வு.

இத்தகைய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒரு நூற்றாண்டில் இல்லாத அளவுக்கு மோடியின் பத்தாண்டு கால ஆட்சி அதிகரிக்கச் செய்திருக்கிறது என்பதும் World Inequality Lab-இன் மார்ச் மாத ஆய்வறிக்கை கூறியது. இதே ஆய்வாளர்களால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை, “இந்தியாவின் 40.1 விழுக்காடு செல்வம் வெறும் ஒரு விழுக்காட்டினரிடம் இருக்கிறது. இது அமெரிக்கா, பிரேசில், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளை விட மோசமான சமத்துவமின்மை. இந்தியாவில் 1980ஆம் ஆண்டில் இருந்தே ஏழை- பணக்காரர் இடையிலான சமத்துவமின்மை அதிகரித்து வருகிறது. இது 2014-15 முதல் 2022-23 இடைப்பட்ட காலத்தில் மிக மோசமாக அதிகரித்திருக்கிறது” என்று கூறியது.

வருவாய் மற்றும் நிகர சொத்துக்களுக்காக வரி முறையை சீரமைப்பது, சுகாதாரம்-கல்வி- ஊட்டச்சத்து சார்ந்தவற்றில் அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் இந்த சமத்துவமின்மை சீர்செய்ய இயலும் என்றும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. ஒரு விழுக்காடு பில்லியனர்களுக்கு (167 பேர்) 2 விழுக்காடு ‘சூப்பர் வரி’ விதித்தாலே தேசிய வருவாயில் 0.5 விழுக்காடு அதிகரிக்கும். அது பல பயனுள்ள முதலீடுகளுக்கு உதவும் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது. ஆனால் மோடி தலைமையிலான ஆட்சியின் செயல்பாடுகள் இதற்கு நேரெதிராகவே உள்ளன. அதனால்தான் சமத்துவமின்மை பெருகியிருக்கிறது. எனவே ஜாதிய பாகுபட்டையும், வர்க்க பாகுபாட்டையும் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. எனவே ஜாதியால் யார் உயர்ந்திருக்கிறார்களோ அவர்கள்தான் செல்வங்களை குவித்து வைத்திருக்கிறார்கள். உயர் ஜாதி இந்துக்கள் தான் இன்றைக்கு பெரும் கார்ப்பரேட்டுகளாக உருவெடுத்திருக்கிறார்கள். ஜாதியத்தை தொடாமல், கார்ப்பரேட் எதிர்ப்பை மட்டும் பேசுவதோ, அதற்கெதிரான செயல்பாடுகளோ தனித்து பயனளிக்கப்போவதில்லை. ஜாதிய எதிர்ப்பில் இருந்து கார்ப்பரேட் சுரண்டலையும் எதிர்க்க வேண்டியதன் அவசியத்தையே இப்புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கீரனூரில் இரண்டு நாள் பயிலரங்கம்

## திண்டுக்கல் மாவட்டக் கழகம் சிறப்பான ஏற்பாடு

திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் இரண்டு நாள் பெரியாரியல் பயிலரங்கம் பழனி கீரனூரில் 11.06.2024 – 12.06.2024 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

பயிலரங்கை கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஒருங்கிணைத்தார். கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி வாழ்த்துரை வழங்கினார்.

பின்னர் “பெரியார் அம்பேத்கர் மார்க்ஸ் பொருத்தப்பாடு” மற்றும் ”பெரியார் மீதான அவதூறுகளும்” என்கிற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், பெரியாரின் பெண் விடுதலை என்கிற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொருப்பாளர் சிவகாமியும், பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலில் (இந்திய) பார்ப்பனர்களின் பங்கு என்கிற தலைப்பில் ம. கி. எட்வின் பிரபாகரனும் உரை நிகழ்த்தினார்கள்.



பின்னர் டெலஸ்கோப் மூலம் நிலவைக் குறித்து அறியும் அறிவியல் வகுப்பினை பேராவூரணி கலைச்செல்வன் நடத்தினார்.

முதல்நாள் நிறைவாக் சமூக ஊடகங்கள் குறித்து முகநூல் பொறுப்பாளர் பரிமளராசனும், இணையதள பொறுப்பாளர் விஜயகுமாரும் உரை நிகழ்த்தினார்கள்.

இரண்டாம் மற்றும் நிறைவு நாளான 12.06.2024 அன்று திராவிடர் இயக்கத்தின் இன்றைய தேவையும் என்கிற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், உலகம் தோன்றிய வரலாறு என்கிற தலைப்பில் பேராவூரணி கலைச்செல்வனும், இயக்கத்தில் தோழர்களின் அடுத்தகட்ட நகர்வு பற்றி சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி மற்றும் திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாக அய்யம் களைதல் என்னும் தலைப்பில் தோழர்களின் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் ஆதாரத்துடன், வரலாற்றுக் குறிப்புகளுடன், எளிமையான விளக்கத்துடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்பாக பதிலளித்தார். இந்நிகழ்வை திண்டுக்கல் மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்தது.

# பழிவாங்கப்படுகிறார் அருந்ததி ராய்



ஒன்றியத்தில் மைனாரிட்டி பாஜக அதிகாரத்துக்கு வந்தவுடனே தனது அடக்குமுறைகளை ஏவத் தொடங்கிவிட்டது. உலகப் புகழ்ப்பெற்ற எழுத்தாளரும், புக்கர் பரிசைப் பெற்றவருமான அருந்ததி ராய் மீது உஃபா சட்டத்தை ஏவுவதற்கான பணிகளை தற்போது தொடங்கிவிட்டனர். அவர் மட்டுமின்றி காஷ்மீர் பேராசிரியர் சேக் சவுகத் உசைன் என்பவர் மீதும் இந்த சட்டத்தை ஏவுவதற்கான வேலைகளை செய்துவருகின்றனர். அப்படி என்ன குற்றத்தை செய்துவிட்டார் அருந்ததிராய்...

சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு 2010ஆம் ஆண்டு டெல்லியில் காஷ்மீர் விவகாரம் குறித்து நடைப்பெற்ற கருத்தரங்கம் ஒன்றில் அருந்ததி ராய் பேசினார். அப்போது காஷ்மீர் குறித்த தனது கருத்துகளை அங்கு பதிவு செய்தார். பேராசிரியர் சேக் சவுகத் உசைனும் இதே கருத்தை தான் பதிவுசெய்தார். அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பாஜக இந்த கருத்தரங்கை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனால் அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ், சட்டவிரோதமாக அங்கு எதுவும் பேசப்படவிடவில்லை. தேச விரோத சட்டங்கள் பாயும் அளவிற்கு அவர்களது பேச்சில் எந்தவித முகாந்திரமும் இல்லை. கருத்துரிமையின் அடிப்படையிலே தான் அவர்களது பேச்சு அமைந்திருக்கிறது என்று கூறி பாஜகவின் கோரிக்கையை நிராகரித்தது அப்போதைய காங்கிரஸ் அரசு.

ஆனாலும் டெல்லி மாநகர காவல்துறை இதுகுறித்து வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று கூறி பாஜகவினர் போராட்டங்களை நடத்தினார்கள். டெல்லி மாநகர காவல்துறை வழக்குப்பதிவு செய்வதற்கான எந்தவித முகாந்திரமும் இல்லை என்று கூறி மறுத்துவிட்டனர். ஆனால் டெல்லி மாஜிஸ்திரேட் நீதிபதி தானாக முன்வந்து இந்த வழக்கை கையில் எடுத்தார். இதுகுறித்து மாநகர காவல்துறை உஃபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று கூறி 14 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆணையை பிறப்பித்தார்.

தற்போது அந்த வழக்கை மீண்டும் கையில் எடுத்திருக்கிறது மைனாரிட்டி பாஜக அரசு. டெல்லி துணைநிலை ஆளுநராக இருக்கிற சக்சேனா, எழுத்தாளர் அருந்ததிராய் மற்றும் பேராசிரியர் சேக் சவுகத் உசைன் உள்ளிட்ட இருவர் மீதும் உஃபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

இதே சக்சேனா தான், கடந்த 2023ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் அருந்ததிராய் மீதும், பேராசிரியர் சேக் சவுகத் உசைன் மீதும் வழக்குப்பதிவு செய்யலாம். இதை மாநில அரசின் சார்பில் வெளியிடுகிறேன் என்று அறிவித்தார். கடந்த எட்டு மாதங்களுக்கு முன்பு மாநில அரசின் சார்பாக இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய பரிந்துரைத்த ஆளுநர் சக்சேனா, இப்போது ஒன்றிய அரசின் சார்பில் கிரிமினல் சட்டத்திற்கு மாற்றாக உஃபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார். இதன்மூலம் அருந்ததிராய், பேராசிரியர் சேக் சவுகத் உசைன் மீது உஃபா சட்டத்தைப் பாய்ச்சி அவர்களை ஆண்டுக்கணக்கில் சிறையில் வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது உருவாகியிருக்கிறது.

கருத்து தெரிவிப்பது என்பது எந்த வகையிலும் குற்றமில்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை ஆதரித்து வைகோ பேசினார் என்பதற்காக அவர் மீது ஒடுக்குமுறை சட்டங்கள் பாய்ந்தது. அந்த வழக்கில் உச்சநீதிமன்றம், தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசுவதில் எந்தக் குற்றமும் இல்லை. அதனால் என்ன விளைவுகள் ஏற்படப்போகின்றன என்பது தான் முக்கியம் என்று கருத்துத் தெரிவித்தது.

14 ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட இந்த பேச்சுகளால் எந்தவித வன்முறைகளும் நிகழவில்லை. 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாஜக காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது. பின்னர் காஷ்மீரை மூன்று யூனியன் பிரதேசங்களாக துண்டாடியது. காஷ்மீர் 370வது சிறப்பு அந்தஸ்து பெற்ற காலத்தில் பேசிய ஒரு கருத்தை, காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்துவிட்ட பின்னர் அவர்கள் மீது உஃபா சட்டத்தை ஏவுவது என்பது அடக்குமுறையின் உச்சம்.

# பெரியார் பல்கலை. துணைவேந்தருக்கு பணி நீட்டிப்பு வழங்கக்கூடாது!



**பெரியார் பல்கலைக் கழக துணை வேந்தருக்கு பணி நீட்டிப்பு வழங்கக் கூடாது! ஊழலில் சிக்கி கைது நடவடிக்கைக்கு ஆளானவருக்கு பணி நீட்டிப்பு வழங்குவதா? கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம்!**

**தமிழ்நாட்டு அரசு இத்துணைவேந்தர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை!**

சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணைவேந்தரின் பதவிக் காலம் ஜூன் மாதம் 30 தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் அவர் தனக்கு மீண்டும் பணி நீடிப்பு பெற தீவிரமாக முயற்சி எடுத்து வருகிறார்.

இத்துணைவேந்தர் மீது தனியார் நிறுவனத்தை பல்கலைக்கழகத்தில் துவங்கியது, பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீடு முறையை பின்பற்றாதது, தமிழ்நாடு அரசு பதிவாளரைப் பணி இடை நீக்கம் செய்யுமாறு அனுப்பிய கடிதத்திற்கு மதிப்பு அளிக்காமல் பதிவாளரைப் பணியில் இருந்து விடுவித்தது, பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டது போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

மேலும் ஊழல் தொடர்பாக கைது நடவடிக்கையையும் எடுத்து உள்ள நிலையில் அவருக்கு பணி நீட்டிப்பு வழங்க முடிவு செய்வது கண்டனத்திற்குரியது. மேலும் இவர் மீது பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் பல்வேறு புகார் மனுக்களை அளித்து உள்ளன.

ஆகவே, தமிழ்நாட்டு அரசு இம்மாத இறுதிக்குள் துணைவேந்தர் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக ஆளுநர் துணை வேந்தர் மீது நடவடிக்கை எடுக்க தமிழ்நாட்டரசுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி உள்ள துணைவேந்தருக்கு பணி நீட்டிப்பும் வழங்கக் கூடாது. விரைவில் ஒரு நல்ல ஊழலற்ற துணை வேந்தரை உடனடியாக நியமிக்க வேண்டும்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத் தொழிலாளர் சங்கம் ஆளுநருக்கும், தமிழக முதல்வருக்கும் அளித்துள்ள புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

**– கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
**13.06.2024**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 21, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran